
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 44 - இஸ்லாம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................................ ✓ △ $\frac{4}{5}$
........................................................................................
........................................................................................

(ii) ........................................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................................
........................................................................................

(iii) ........................................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................................
........................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ). தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**ட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○ ○ ○

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் ... Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka ...

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

06.08.2018 / 0830 - 1030

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

**44 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. அல்லாஹ்வின் திருநாமங்களில் படைப்பாளன் என்பதைக் குறிக்கும் சொல்
   (1) அர்ரஹ்மான் (2) அர்ரஸ்ஸாக் (3) அல்காலிக் (4) அல்குத்தூஸ் (5) அஸ்ஸலாம்

2. பின்வருபவர்களில் உலுல் அஸ்ம்களில் அடங்கும் நபி
   (1) இஸ்மாயீல் (அலை) (2) இப்ராஹீம் (அலை) (3) தாவூத் (அலை) (4) யூஸுப் (அலை) (5) ஹூத் (அலை)

3. உம்மஹாத்துல் மு஼மினீன்களில் அதிகமான ஹதீஸ்களை ரிவாயத் செய்தவர்
   (1) ஆயிஷா (ரழி) (2) ஸவ்தா (ரழி) (3) கதீஜா (ரழி) (4) ஹப்ஸா (ரழி) (5) ஸைனப் (ரழி)

4. ஹஜ் நிறைவேற்றப்படும்போது கல்லெறியும் சடங்கு இடம்பெறும் இடம்
   (1) க஼பா (2) மர்வா (3) ஸபா (4) மினா (5) அறபா

5. தப்ஸீர் கலையில் நிபுணத்துவம் பெற்றோர்
   (1) முஹத்திஸீன் (2) முஜ்தஹிதீன் (3) முஅல்லிமீன் (4) முஜத்திதீன் (5) முபஸ்ஸிரீன்

6. பின்வருவனவற்றுள் அர்காநுல் கியாஸில் அடங்காதது
   (1) அஸ்ல் (2) பர்உ (3) இஜ்திஹாத் (4) இல்லத் (5) ஹுக்ம்

7. குத்பாவுடன் இடம்பெறும் பர்ளான கூட்டுத்தொழுகை
   (1) ஸலாத்துல் குஸூபைன் (2) ஸலாத்துல் இஸ்திஸ்காஉ (3) ஸலாத்துல் ஈதைன் (4) ஸலாத்துல் ஜும்ஆ (5) ஸலாத்துல் இஸ்திகாரா

8. அல் - குர்ஆன் தொகுப்பு முயற்சியில் கூடுதலாக பங்கெடுத்துக் கொண்ட ஸஹாபி
   (1) முஆத் (ரழி) (2) முஸ்அப் (ரழி) (3) உஸ்மான் (ரழி) (4) ஸைத் (ரழி) (5) ஜ஼பர் (ரழி)

9. கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களின் தூண்டுதலால் ஹதீஸ் தொகுப்பு முயற்சியை ஆரம்பித்தவர்
   (1) இமாம் ஸுஹ்ரி (2) இமாம் சுயூத்தி (3) இமாம் அபூதாவூத் (4) இமாம் அப்துல்லா இப்னு முபாறக் (5) இமாம் இப்னு மாஜா

10. நேரடியான சட்ட ஆதாரங்கள் கிடைக்காதபோது, காழி சுய அனுமானத்தின் மூலம் வழங்கும் தீர்ப்பு
   (1) ஹுதூத் (2) கிஸாஸ் (3) த஼ஸீர் (4) ஜினாயத் (5) கத்ல்

11. 'அல் ஜிஹாத் பில் மால்' என்பதில் அடங்குவது
(1) உளப்போராட்டம் (2) அரசியல் போராட்டம் (3) பிரசாரப்பணி
(4) உயிர்த்தியாகம் (5) பொருள் தியாகம்

12. 'ஸலாத்துல் குஸூபைன்' இடம்பெறும் சந்தர்ப்பம்
(1) கிரகணம் நிகழும்போது (2) நன்மையை எதிர்பார்க்கும்போது
(3) வரட்சி நீடிக்கும்போது (4) மழை தேடும்போது
(5) பெருநாளன்று காலையில்

13. 'பைத்துல் மக்திஸ்' திசையிலிருந்து 'பைத்துல்லாஹ்வின்' திசைக்கு கிப்லா மாற்றப்பட்டதன் நினைவாக அமைந்துள்ள மஸ்ஜித்
(1) மஸ்ஜித் நமிரா (2) மஸ்ஜிதுல் ஹராம்
(3) மஸ்ஜிதுல் கிப்லதைன் (4) மஸ்ஜிது குபா
(5) மஸ்ஜிதுந் நபவி

14. கசையடித் தண்டனை வழங்கப்படும் இரு குற்றங்கள்
(1) விபசாரம், களவு (2) கொலை, முர்தத்
(3) களவு, கொலை (4) மது அருந்துதல், அவதூறு சொல்லல்
(5) கொள்ளை, விபசாரம்

15. பின்வருபவருள் அஜ்னபியாக உள்ளவர்
(1) மாமனின் மகள் (2) தாயின் சகோதரி (3) மகனின் மனைவி
(4) மனைவியின் தாய் (5) தந்தையின் மகள்

16. இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் கடைப்பிடிக்கும் அகீதா பிரிவு
(1) தஹாவிய்யா (2) மு.'தஸிலா (3) அஷ்அரிய்யா
(4) ஜ.'பரிய்யா (5) மாதுருதிய்யா

17. கருத்து வேறுபாடின்றி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இஜ்மா
(1) இஜ்மா சுகூத்தி (2) இஜ்மா ஸரீஹ்
(3) இஜ்மா அக்ஸரிய்யா (4) இஜ்மா நக்லி
(5) இஜ்மா இஸ்திஹாதி

18. பின்வருபவருள் ஸஹாபி அல்லாதவர்
(1) ஹஸன் பஸ்ரி (2) பிலால் ஹபஷி (3) சுஹைப் ரூமி
(4) ஸல்மான் பார்ஸி (5) அபூதர் கிபாரி

19. நபி மூஸா (அலை) நபி இப்றாஹீம் (அலை) ஆகியோருக்கு எதிராக செயற்பட்ட மன்னர்கள் முறையே
(1) ஜாலூத், பிர்அவ்ன் (2) நம்ரூத், அஸீஸ்
(3) பல்கீஸ், பிர்அவ்ன் (4) நம்ரூத், ஜாலூத்
(5) பிர்அவ்ன், நம்ரூத்

20. இமாமுல் அ.'ழம் என்றும் இமாமுல் மதீனா என்றும் அழைக்கப்பட்ட இரு இமாம்கள் முறையே
(1) அபூஹனீபா, மாலிக் (2) புகாரி, முஸ்லிம்
(3) ஷாபிஈ, ஹனபீ (4) குர்துபி, ஜவ்ஸி
(5) நஸாஈ, திர்மிதி

21. பின்வரும் ஸூறாக்களில் 'தர்தீப் திலாவத்' ஒழுங்கில் அமைந்துள்ள ஸூறாக்கள்
(1) பாத்திஹா, இக்லாஸ், அந்நாஸ் (2) இக்லாஸ், பலக், அந்நாஸ்
(3) பகரா, பாத்திஹா, நிஸாஉ (4) யாஸீன், முல்க், ஹஷ்ர்
(5) அலக், முத்தஸ்ஸிர், முஸ்ஸம்மில்

22. இறந்துபோன கணவனுக்காக மனைவி 'இத்தா' இருப்பதற்கு மிகப் பொருத்தமான காரணம்
(1) துக்கம் அனுட்டித்தல் (2) பொறுமை காத்தல்
(3) கணவனுக்காக பிரார்த்தித்தல் (4) கருத்தரிப்பை உறுதி செய்தல்
(5) அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றல்

23. ஸுன்னத்தான நோன்பு நோற்பதற்கு தடுக்கப்பட்ட நாட்கள்
(1) ஷவ்வால் 2, 3 (2) முஹர்ரம் 9, 10 (3) துல்ஹஜ் 11, 12
(4) ஷ.'பான் 14, 15 (5) றஜப் 27, 28

**24.** உம்றா நிறைவேற்றப்படும் ஒழுங்கை சுட்டும் தெரிவு யாது?
(1) ஸஈ, இஹ்ராம், முடிகளைதல், தவாப்
(2) தவாப், முடிகளைதல், ஸஈ, இஹ்ராம்
(3) முடிகளைதல், தவாப், இஹ்ராம், ஸஈ
(4) இஹ்ராம், தவாப், ஸஈ, முடிகளைதல்
(5) இஹ்ராம், ஸஈ, முடிகளைதல், தவாப்

**25.** பின்வருவனவற்றுள் அல்லாஹ்வின் பண்புகளை குறிக்கும் தொகுதியினை தெரிவு செய்க
(1) ஜாஹிலுன், பனாஉன், அஜ்துன், மவ்துன்
(2) கதீமுன், வாஹிதுன், காதிருன், ஹய்யுன்
(3) கியானத், கித்புன், பலாதத், கித்மான்
(4) பதானத், இல்முன், கித்புன், பனாஉன்
(5) பதானத், ஸித்குன், தப்லீக், அமானத்

**26.** வுழுச் செய்வதற்கு சுத்தமான நீரைப் பெறுவது
(1) ஸுன்னத்
(2) பர்ளு
(3) வாஜிப்
(4) ஷர்த்து
(5) மக்றூஹ்

**27.** அபூஜஹ்ல் பின்வரும் எந்தப் பிரிவில் அடங்குவான்?
(1) முர்தத்
(2) முனாபிக்
(3) முஸ்லிம்
(4) முல்ஹித்
(5) முஷ்ரிக்

**28.** பின்வருபவருள் நபி(ஸல்) அவர்களின் வளர்ப்பு மகன்
(1) காஸிம் (2) ஸைத் (3) இப்றாஹீம் (4) அலி (5) அப்துல்லாஹ்

**29.** பின்வருவனவற்றுள் மணமக்களை வாழ்த்தும் துஆ
(1) ஷபாக்கல்லாஹ்
(2) பி அமானில்லாஹ்
(3) பாரகல்லாஹ் பீகும்
(4) ஜஸாகல்லாஹு கைரன்
(5) இன்ஷா அல்லாஹ்

**30.** இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்காக பாடசாலைகளை அமைத்த முன்னோடி யார்?
(1) எம்.சி. சித்திலெப்பை
(2) கசாவத்தை ஆலிம்
(3) எம்.ரீ. அக்பர்
(4) ஆலிமுல் அரூஸ்
(5) சேர். ராஸிக் பரீத்

**31.** இமாம் புகாரி(ரஹ்) முஹத்திஸ்களில் உயர்ந்தவராகக் கணிக்கப்படுவதற்கான காரணம்
(1) ஹதீஸ்களைத் திரட்டியமை
(2) ஹதீஸ்துறை மாணவர்களை உருவாக்கியமை.
(3) ஸஹீஹ் புகாரியை தொகுத்தமை.
(4) ஹதீஸ்களைத் திறனாய்ந்து வகுத்தமை.
(5) பல பிரதேசங்களுக்கும் சென்று ஹதீஸ்களை திரட்டியமை

**32.** முஜ்தஹித் முதலக் என்ற தரத்திலுள்ள இரு இமாம்கள்
(1) ஔஸாயி, ழாஹிறி
(2) மாலிக், ஷாபிஈ
(3) சுயூத்தி, குர்துபி
(4) தாரமி, பைஹகி
(5) ஷைபானி, அபூயூசுப்

- **33** தொடக்கம் **36** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றுடனொன்று தொடர்புடையவை. அதன்படி **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுடன் சரியாக தொடர்புபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவு செய்க.

**33.**

| X | Y |
|---|---|
| யவ்முல் ப.்.ஸ் | A - தீர்ப்பு வழங்கும் நாள் |
| யவ்முல் ஹிஸாப் | B - ஒன்று திரட்டும் நாள் |
| யவ்முத்தீன் | C - கணக்கு கேட்கும் நாள் |
| யவ்முல் ஹஷ்ர் | D - எழுப்பப்படும் நாள் |

(1) A B C D (2) A C B D (3) B A C D (4) C D A B (5) D C A B

34. X

கபாஅத்
அஜ்னபி
மஹ்ரமி
வலி

Y

A - மணமுடிக்க அனுமதிக்கப்பட்டவர்
B - மணமகளின் தந்தை
C - மணமுடிக்க அனுமதிக்கப்படாதவர்
D - பொருத்தப்பாடு

(1) ABCD (2) ACDB (3) BCDA (4) CDAB (5) DACB

35. X

இல்முன்
பஸீருன்
காதிருன்
மவ்துன்

Y

A - சக்தியுள்ளவன்
B - மரணம்
C - அறிவு
D - பார்ப்பவன்

(1) ABCD (2) ADCB (3) BCDA (4) CDAB (5) DBAC

36. X

இல்முல் ஹதீஸ்
இல்முத் தப்ஸீர்
இல்முல் பிக்ஹு
இல்முல் அகாஇத்

Y

A - இமாம் முஸ்லிம்
B - இமாம் ஷாபிஈ
C - இமாம் ராஸி
D - இமாம் அஷ்அரி

(1) ABCD (2) ACBD (3) ADBC (4) BCDA (5) CDAB

37. பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்க.

A – இம்மை மறுமை இரண்டுக்கும் வழிகாட்டுகிறது.
B – உலகைத் துறந்து வாழ வழிகாட்டுகிறது.
C – வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டுகிறது.
D – நெகிழாத் தன்மையைக் கொண்டுள்ளது.
E – அடிப்படை மூலாதாரங்களைக் கொண்டது.
F – மனித முயற்சியால் மட்டும் உருவானது.

மேலுள்ளவற்றுள் இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய தொகுதி

(1) A, B, C (2) A, C, E (3) B, C, D (4) B, D, F (5) C, D, E

38. பின்வருவனவற்றைக் கருதுக.

A – துஆஉலிப்திதாஹ் ஓதுதல்
B – றுகூஉவில் தஸ்பீஹ் செய்தல்
C – வுழூஉ செய்தல்
D – இஃதிகாப் இருத்தல்
E – ஸலவாத்தில் அஸ்ஹாபுகளைச் சேர்த்தல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் தொழுகையின் ஸுன்னத்துகளில் அடங்குபவை

(1) A, B, C (2) A, B, E (3) B, C, D (4) C, D, E (5) D, E, C

39. மனிதன் நிறைவேற்ற வேண்டிய இபாதத், கிலாபத், இமாரத் பணிகள் சில வருமாறு

A – அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றல்
B – நீர் நிலைகளை அசுத்தப்படுத்தல்
C – சுற்றாடலை அழகுபடுத்தல்
D – பெற்றோருக்குரிய கடமைகளை நிறைவேற்றல்
E – ஆட்சிக்கு விசுவாசமாக நடத்தல்
F – தொழுகை நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றல்

மேற்குறிப்பிட்டவற்றுள் இபாதத் பணிகளுடன் தொடர்பானவை

(1) A, B, C (2) A, D, F (3) B, C, D (4) C, D, F (5) D, E, F

**40.** ஒருவர் முச்சக்கர வண்டியொன்றில் குறிப்பிட்ட தூரத்துக்கு பயணம் செய்து ஒரு தொகைப் பணத்தை சாரதிக்குக் கொடுக்கிறார். இந்தச் செயற்பாடு
(1) அல்பைஉ (2) ஸம்ஸரா (3) அல்கர்ழ் (4) அல்இஜாரா (5) அர்ரிபா

**41.** ஒரு தரப்பினர் மூலதனத்தையும் மற்றொரு தரப்பினர் உழைப்பையும் வைத்து மேற்கொள்ளப்படும் வணிக முயற்சி
(1) முஸாரஆ (2) ஸலம் (3) முஷாரகா (4) முழாரபா (5) பைஉல் முஅஜ்ஜல்

**42.** பாவத்தில் விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் சந்தேகமானவற்றிலிருந்து தவிர்ந்துக் கொள்வது
(1) தஸ்கியா (2) தக்வா (3) ஸுஹ்து (4) வரஉ (5) தவ்பா

**43.** மு'தஸிலா இயக்கத்தின் தாபகராக் கொள்ளப்படுபவர்
(1) வாஸில் பின் அதா
(2) அபுல்ஹஸன் அஷ்அரி
(3) அப்துல் காதிர் ஜீலானி
(4) கஸ்ஸாலி
(5) ஸர்ஹிந்தி

**44.** இலங்கைக்கு இஸ்லாத்தின் தூதைக் கொண்டு வந்தவர்
(1) இப்னு பதூதா
(2) இப்னு ஷஹ்ரயார்
(3) வஹப் இப்னு ஹப்ஸா
(4) காலித் பின் பகாயா
(5) மாப்பிள்ளை ஆலிம்

**45.** மணமகளுக்குரிய தகுதியை இழந்தவர்
(1) முஸ்லிமாயிருப்பவர்
(2) பெண்ணாக இருப்பவர்
(3) அஜ்னபியாக இருப்பவர்
(4) கற்புள்ளவராயிருப்பவர்
(5) மற்றொருவரின் மனைவியாயிருப்பவர்

- **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பனவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது. | சரியானது. |
| (2) | சரியானது. | பிழையானது. |
| (3) | பிழையானது. | பிழையானது. |
| (4) | பிழையானது. | சரியானது. |
| (5) | சரியானது. | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | ஈமானும் அமலும் ஒன்றோடொன்று பிணைந்திருக்க முடியாதவை. | பர்ளு ஐன், பர்ளு கிபாயா ஆகிய இரண்டும் எல்லோராலும் தனித்தனியாக கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டியவை. |
| **47.** | இல்ஹாத் கோட்பாடு இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் காணப்பட்டது. | அப்துல்லா இப்னு உபை முனாபிக்களில் ஒருவனாவான். |
| **48.** | கவாரிஜ்கள் ஸிப்பீன் போரின்போது தோற்றம் பெற்றனர். | மக்கீ, மதனீ வசனங்கள் கருத்திலும் மொழியமைப்பிலும் ஒரே தன்மையைக் கொண்டவை. |
| **49.** | ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் சித்தி லெப்பையின் பணியைத் தொடர்ந்தார். | ஹதீஸ்களில் முதவாத்திரான ஹதீஸ்கள் மிகப் பலமானவை. |
| **50.** | "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். உங்கள் பொறுப்புப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படும்." என்பது ஹதீஸாகும். | அரசபணியில் ஈடுபடுவோர் உரிய நேரத்தில் சமூகமளித்தலும் உரிய பணியை நேர்த்தியாக செய்வதும் கடமையாகும். |

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂය / பாடம்: **இஸ்லாம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 5 | 21. | 2 | 31. | 4 | 41. | 4 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 5 | 32. | 2 | 42. | 4 |
| 03. | 1 | 13. | 3 | 23. | 3 | 33. | 5 | 43. | 1 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 4 | 34. | 5 | 44. | 3 |
| 05. | 5 | 15. | 1 | 25. | 2 | 35. | 4 | 45. | 5 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 4 | 36. | 2 | 46. | 3 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 5 | 37. | 2 | 47. | 4 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 2 | 38. | 2 | 48. | 2 |
| 09. | 1 | 19. | 5 | 29. | 3 | 39. | 2 | 49. | 1 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 1 | 40. | 4 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

## பகுதி I

1. பின்வரும் சோடிச் சொற்களுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.
   (i) தௌஹீத் ருபூபிய்யா - தௌஹீதுல் உலூஹிய்யா

**தௌஹீத் ருபூபிய்யா**

- சொல் விளக்கம் : றப்பு என்ற சொல்லிலிருந்து பிறந்தது.
- பொருள் விளக்கம் : இரட்சகன், ஆளுபவன், பராமரிப்பவன், படைப்பவன், போசிப்பவன், சொந்தக்காரன் முதலான கருத்துக்களைத் தருகிறது.
- அல்லாஹ்வை அகிலத்தின் படைப்பாளனாகவும், போசிப்பவனாகவும் இரட்சித்துக் காப்பவனாகவும் திட்டமிடுபவனாகவும் நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பானவனாகவும் மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் பொறுப்பாளனாகவும் ஏற்றுக்கொள்வதே ருபூபிய்யாத் எனப்படுகிறது.
- இது கோட்பாடு சார்ந்த தவ்ஹீத் ஆகும்
- அல்குர்ஆன், ஹதீஸ் விளக்கம் : ஜாஹிலிய்யாக் கால மக்கள் அல்லாஹ்வை றப்பாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொன்றையும் படைத்தவன் யார் எனக் கேட்ட போது றப்பு என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

**தௌஹீத் உலூஹிய்யா**

- சொல் விளக்கம்: இலாஹ் என்ற சொல்லிலிருந்து பிறந்தது
- பொருள் விளக்கம்: வணங்கி வழிபடத் தகுதியானவன், இலாஹுக்குரிய முழுப் பண்புகளும் அவனிடமே உள்ளன. அவனே வணங்கி வழிபாடத்தக்கவன்
- இது நடைமுறை சார்ந்த தௌஹீத் ஆகும்
- அல்லாஹ்வை நம்பி வழிபடல் என்பதாகும்
- ஜாஹிலிய்யாக் காலத்தில் அம்மக்கள் அல்லாஹ்வை இலாஹாக ஏற்கத் தயங்கினார்கள்
- அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரம்: உமக்கு முன் நாம் அனுப்பிய அனைத்துத் தூதர்களுக்கும் என்னைத் தவிர வேறு இலாஹ் இல்லை, எனக்கு மட்டுமே இபாதத் செய்யுங்கள் என்று வஹி அறிவித்தோம். (அன்பியா: 25) மற்றும் (28:88)

சோடிச் சொற்களுக்களுடன் தொடர்புடைய ஐந்து கருத்துக்களை சுருக்கமாக விளக்கி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(ii) ஷிர்க் அக்பர் - ஷிர்க் அஸ்கர்

**ஷிர்குல் அக்பர்**

- சொல் விளக்கம்: பெரிய ஷிர்க் என்பது இதன் கருத்தாகும் (இணைவைப்பு)
- பொருள் விளக்கம்: இது மன்னிக்கப்படாத குற்றம் என்பதனால், இதனைச் செய்தவர் இஸ்லாத்திலிருந்து நீங்கியவராக கருதப்படுகிறார்.
- வகைகள்: இது ஜலி (தெளிவானது) கபி (மறைவானது) என இருவகைப்படும்.
- அல்லாஹ் அல்லாதவற்றுக்கு தெய்வீகத் தன்மையை வழங்கல், சூரியன், சந்திரன், கற்கள், உயிரினங்கள், ஜின்கள் முதலியவற்றை வணங்குதல் போன்றன தெளிவான இணைவைப்பாகும்.
- அல்லாஹ்வின் உரிமையை மற்றொன்றுக்கு அல்லது பலவற்றுக்கு வழங்குதல்
- இவை தொடர்பான அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள்.

ஷிர்குல் அஸ்கர்

- சொல் விளக்கம்: சிறிய ஷிர்க்.
- பொருள் விளக்கம்: இது ஷிர்குல் அக்பருடன் ஒப்பிடும் போது பாரதூரம் குறைந்தது எனினும் இணைவைப்பாக எச்சரிக்கப்பட்டுள்ளது
- அல்லாஹ் அல்லாதவற்றிடம் சத்தியம் செய்தல், மரணித்தவரிடம் உதவி தேடல், அல்லாஹ்வின் சட்டங்களைப் புறக்கணித்தல், சரி பிழை கூறும் அதிகாரத்தை அல்லாஹ் அல்லாதவற்றிடம் ஒப்படைத்தல் முதலானவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.
- தஜ்ஜாலின் பித்னாவை விடவும் சிறிய ஷிர்க் ஆபத்தானது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சோடிச் சொற்களுடன் தொடர்புடைய ஐந்து கருத்துக்களை சுருக்கமாக விளக்கி இருப்பின்
(1 x 5 = 5 புள்ளிகள்)

(iii) கதரிய்யா - ஜபரிய்யா

கதரிய்யா

- கத்ர் என்ற சொல்லிலிருந்து பிறந்தது
- வரலாற்றில் கத்ரை மறுத்து விமர்சித்ததால் இவர்கள் கதரிய்யா எனப்பட்டனர்.
- இதனால், கழாக் கத்ர்க்கு எவ்விதத் தாக்கமும் கிடையாது. மனிதனின் சுய நாட்டப்படியே அவனது செயற்பாடுகள் நிகழ்கின்றன என்பது இவர்களது வாதமாகும்.
- இதனைப் பரப்பியவர் மஃபத் அல் ஜுஹைனி

ஜபரிய்யா

- அனைத்தும் கழாக்கத்ர் படியே நிகழ்கின்றன.
- மனிதனுக்கு எவ்வித செயற் சுந்திரமும் இல்லை. அவன் நிர்ப்பந்த நிலையிலேயே தொழிற்படுகிறான்.
- இதனைப் பரப்பியவர் ஜஃத் இப்னு திர்ஹம்

சோடிச் சொற்களுடன் தொடர்புடைய ஐந்து கருத்துக்களை சுருக்கமாக விளக்கி இருப்பின்
(1 x 5 = 5 புள்ளிகள்)

(iv) முஃதஸிலா - அஷ்அரிய்யா

முஃதஸிலா

- அகீதாவில் அஹ்லுஸ் ஸுன்னாக்களுக்கு முரணான சிந்தனைப் பிரிவினர்
- பகுத்தறிவிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கினர். பகுத்தறிவிற்கு எட்டாதவற்றை நிராகரித்தனர்.
- இதன் தாபகர் வாஸில் பின் அதா (பஸரா). இவர் ஹஸனுல் பஸரியின் மாணவனாக இருந்து கருத்து முரண்பட்டு வெளியேறியவர்.
- இவர்களது கருத்துக்கள்
  - தௌஹீத் (அல்லாஹ்வின் தாத் ஸிபாதும் ஒன்றாகும்.)
  - அத்ல் (மனிதனது செயல்களுக்கு மனிதனே பொறுப்பானவன்)
  - அல்மன்ஸிலது பைனல் மன்ஸிலதைன் (பெரும்பாவங்கள் செய்தோர் முஃமினுமல்ல, காபிருமல்ல)
  - அம்ரு பில் மஃரூப் வன்னஹி அனில் முன்கர் (தஃவா பர்ளு ஐன்)
  - அல் வஃது வல் வஈத் (நன்மைக்கு கூலியும் பாவங்களுக்கு தண்டனையும் வழங்குவது அல்லாஹ்வின் கடமை)

**அஷ்அரிய்யா**

- சரியான அகீதாக் கொள்கையைக் கொண்டோர்.
- ஸ்தாபகர்: அபுல் ஹஸன் அலி பின் இஸ்மாயீல் அல்அஷ்அரி (பஸரா). அபூஅலி அல்ஜுபாயியிடம் கற்று வளர்ப்பு மகனாக அமர்ந்து கருத்து முரண்பட்டு நாற்பதாவது வயதில் வெளியேறினார்.
- இவர்களது கருத்துக்கள்
  - மனிதப் பண்புகளை இறைவனின் பண்புகளுடன் ஒப்பிட்டுக் கூறக்கூடாது.
  - தீவிர பகுத்தறிவுவாதத்தை எதிர்த்து அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தோடு இணைந்து செயற்பட்டனர்.
  - அல்குர்ஆன் படைக்கப்பட்டதன்று.
  - மறுமையில் அல்லாஹ்வை வெற்றுக்கண்களால் காண முடியும்.
  - தனது செயல்களுக்கு தானே பொறுப்பு. அவனுக்கு செயல் சுதந்திரம் உண்டு.
  - தாத்தும் ஸிபாத்தும் வெவ்வேறானவை. 'குன்' என்ற வார்த்தை மூலம் அனைத்தும் படைக்கப்படன. (சுவர்க்கம், நரகம்)
  - பகுத்தறிவை விட வஹ்யிக்கு முக்கித்துவம் கொடுக்கப்படல் வேண்டும்
  - கப்ரில் விசாரணை உண்டு

சோடிச் சொற்களுக்களுடன் தொடர்புடைய ஐந்து கருத்துக்களை சுருக்கமாக விளக்கி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 5 x 4 = 20 புள்ளிகள்)

2. முஸ்லிம் சமூக அமைப்பிலும் சமூக நலனிலும் பின்வருவனவற்றின் பங்கை தெளிவுபடுத்துக.
   (i) ஜமாஅத் தொழுகை

**ஜமாஅத் தொழுகை**

- பர்ளான கடமைகளில் ஒன்று என்பதனால் முஸ்லிம்களை ஒன்றுகூட்டுவதற்கான ஒரு கடமையாகும்.
- சமூகத்தின் மத்திய நிலையமான மஸ்ஜிதில் ஒன்றுகூடல்
- மஃமூம்கள் ஒரு இமாமுக்குக் கட்டுப்படுவதன் மூலம் தலைமைக்குக் கட்டுப்படும் மனப்பாங்கை விருத்தி செய்தல்
- நேரக் கட்டுப்பாடு
- ஐக்கியம், பிணைப்பு
- தேவைகளையும் பிரச்சினைகளையும் இனங்காணல்
- பிரச்சினைகளையும் தேவைகளையும் தீர்த்து வைத்தல்
- ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான முன்னோடியாக அமைதல்.
- அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள்

இவைபோன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(ii) ஸகாத்

**ஸகாத்**

- சமூக வாழ்வில் பொருளாதாரத்திற்குரிய முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கடமை.
- தனித்த கடமை என்ற போதிலும் கூட்டாக நிறைவேற்ற வேண்டியது.
- வசதியற்றோர் - வசதி படைத்தோர் உறவை வலுப்படுத்துகிறது.
- சமூகத்தின் அனைத்து வகையான தேவையுடைவர்களையும் கருத்தில் கொள்கிறது.
- கூட்டாக நிறைவேற்றப்படுவதன் மூலம் சமூகத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்கின்றது.
- நற்பண்புகளை வளர்க்கும் - கொடை, தயாளம், அன்பு.
- தீய பண்புகளை இல்லாதொழிக்கும் - கஞ்சத்தனம், திருட்டு, களவு.
- பொருளாதார அபிவிருத்தி
- ஊக்குவிப்பு – முஅல்லபதுல் குலூப்

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iii) திருமணம்

**திருமணம்**

- கட்டுக் கோப்பான ஒரு சமூகத்திற்கான அத்திவாரம்
- பாலுணர்வை நெறிப்படுத்துகிறது.
- ஹலாலான சந்ததி உருவாக்கம்
- புதிய குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்புகிறது.
- அன்பு, காப்புத் தேவைகளை நிவர்த்தித்தல்.
- தனிமனித பொறுப்புணர்வை வலுப்படுத்தல்.
- அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள்

இவைபோன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iv) வாரிசுரிமை

**வாரிசுரிமை**

- சமூக உருவாக்கத்திற்கு பொருளாதார வழிகாட்டலின் முக்கியத்துவம்.
- சொத்துப் பகிர்விற்கான நிரந்தர ஒழுங்காக அமைதல்.
- குடும்ப உறவு சிதைவடையாமல் இருப்பதற்கான வழிமுறை.
- சொத்துப் பங்கீட்டில் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமைதல்
- இல்முல் வராஸத் - மீராஸ் என்ற தனியான கலையின் உருவாக்கம்.

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 5 x 4 = 20 புள்ளிகள்)

3. பின்வருவோர் இஸ்லாத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(i) வரகதிப்னு நௌபல்

**வரகத் இப்னு நவ்பல்**

- முன்னைய வேதங்களைக் கற்றறிந்தவராகவும் ஹனீபாகவும் இருந்தார்.
- நபி (ஸல்) அவர்களின் வருகையை (நுபுவ்வத்தை) உறுதிப்படுத்தினார்.
- நபி (ஸல்) அவர்களதும் கதீஜா (றழி) அவர்களதும் அச்சத்தை நீக்கி தைரியப்படுத்தினார்.
- ஷாம் பிரதேச துறவிகளின் கருத்துக்களை மக்காவிலும் உறுதிப்படுத்தினார்.
- அவரின் ஆளுமை - குறைஷியரின் எதிர்ப்பைத் தணிப்பதிலும் பிரமுகர்கள் இஸ்லாத்தை ஏற்கச் செய்வதிலும் பங்களிப்புச் செய்தது.

மேற்போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(ii) இமாம் ஷாபிஈ

**இமாம் ஷாபிஈ (றஹ்)**

- இவர் பிக்ஹ், மொழி, இலக்கியம், மருத்துவம், வரலாறு முதலான துறைகளுக்கு பங்களிப்புச் செய்துள்ளார்.
- அஹ்லுர் ரஃயு – அஹ்லுல் ஹதீஸ் (பகுத்தறிவு - வஹி) இரண்டுக்குமிடையில் இணக்கம் காணல்
- சட்டத் தீர்ப்புகளில் கால, இட வேறுபாட்டுக்கிணங்க நெகிழ்ந்து கொடுத்தல். கதீம் (பக்தாத்) ஜதீத் (எகிப்து) தீர்ப்புக்கள்
- உஸ்லுல் பிக்ஹை உருவாக்கல் (அர்ரிஸாலதுல் உஸ்லிய்யா)
- பிக்ஹ்த் துறை மாணவர்களையும் நூல்களையும் உருவாக்கல்

மேற்போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iii) அபுல் ஹஸன் அஷ்அரி

**இமாம் அஷ்அரி ( றஹ் )**

- இவர் அகீதா துறை சார்ந்த பங்களிப்புக்களை வழங்கியவர்களுள் முக்கியமானவர்.
- அக்லையும் நக்லையும் பயன்படுத்தி இஸ்லாமிய அகீதா சிந்தனையை நடுநிலையில் நின்று முன்வைத்தவர்.
- இஸ்லாமிய அகீதாக் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்கு பங்களித்தவர்.
- கலீபா மாமூனின் காலத்தில் இருந்து முஃதஸிலாக் கோட்பாடு உச்சநிலையை அடைந்திருந்தபோது இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் செய்த பணிக்கு அமைப்பாக்கம் வழங்கினார்.
- முஃதஸிலா அமைப்பைச் சேர்ந்த வளர்ப்புத் தந்தையிடம் பயின்று முஃதஸிலாப் பிரசாரகராக அமைந்து 40ஆவது வயதில் தெளிவுபெற்று முஃதஸிலாக்களுக்கு எதிராக அவர்களின் பிரசார உத்திகளோடு (தத்துவ சொற்கள், அணுகுமுறைகள்) அஷ்அரிக் கோட்பாட்டை முன்வைத்தார்.
- முஸ்லிம்களை பகுத்தறிவுக் கோட்பாட்டால் வழிகெடாமல் பாதுகாத்தார்.
- அஷ்அரிக் கோட்பாட்டை உறுதிப்படுத்தினார்.
- மாதுரூதிய்யா போன்ற பிற அமைப்புக்களுக்கு வழிகாட்டினார்.
- முஃதஸிலா, ஜஹமிய்யா, கவாரிஜ் மற்றும் ஏனைய வழிகெட்ட சிந்தனைகளை மறுதலித்தார்.

மேற்போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iv) எம்.ஸீ.சித்திலெப்பை

**சித்தி லெப்பை**

- கிறிஸ்தவ மிஷனரிகளின் மதமாற்ற முயற்சியால் முஸ்லிம்கள் மதம் மாறிவிடாமல் பாதுகாத்தார்.
- சமய சூழலில் நவீன கல்வியை வழங்க வேண்டும் என போராடினார்.
- பாடசாலைகளைத் தோற்றுவித்தல் (மத்ரஸதுல் கைரிய்யா, மத்ரஸதுஸ் ஸாஹிரா)
- நூல்கள், பாடநூல்கள் யாத்தல் (அறபு முதல் புத்தகம், அறபு இரண்டாம் புத்தகம், ஹிதாயதுல் காஸிமிய்யா, கிதாப் அல் ஹிஸாப், கிறாஅத்துல் அறபிய்யா, தமிழ் ஒன்று, தமிழ் இரண்டு)
- முஸ்லிம் நேசன் பத்திரிகை போன்றவற்றிற்கூடாக முஸ்லிம் சமூகத்தை மறுமலர்ச்சி பெறச் செய்தார்.
- முஸ்லிம் விவாகப் பதிவு முறையை ஒழுங்குபடுத்தினார்.
- சமூகத்தில் காணப்பட்ட மூட நம்பிக்கைகளை எதிர்த்தார்.

மேற்போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 5 x 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) வஹி என்றால் என்ன?

- மொழிக் கருத்து – செவிமடுப்போர் மாத்திரம் விளங்கும் வகையில் விரைவாகவும் மறைமுகமாகவும் ஒரு விடயத்தை உணர்த்துதல்.
- அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கும் றஸூல்மார்களுக்கும் மட்டும் கிடைப்பதாகும். (வேதங்கள் மற்றும் ஸுஹுபுகள்)
- வஹி என்ற சொல்லை, அல்குர்ஆன் பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தியுள்ளது. (உள்ளுணர்வு (28:7, பிராணிகளின் உள்ளுணர்வு 16:28, சைக்கினையால் உணர்த்துதல் 19:11)
- வஹி அறிவிக்கப்பட்ட வழிமுறைகள் - இல்ஹாம் அல்லது கனவு (37:102, திரைக்குப் பின்னாலிருந்து பேசுதல் 4:164, பொறுப்பான மலக்கு ஜிப்ரீல் (அலை) கொண்டுவந்து வழங்குதல்
- வஹியின் வகைகள் - வஹி மத்லூஃ (அல்குர்ஆன்), வஹி கைரு மத்லூஃ (அல் ஹதீஸ்)

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(ii) நபி (ஸல்) அவர்களுக்கு, முதல் வஹி அருளப்பட்ட முறையினை விளக்குக.

- நபி (ஸல்) அவர்கள் தனது 40 ஆம் வயதில் சமூகம் பற்றிய கவலையில் ஹிறாவில் தனித்திருத்தல்
- ஜிப்ரீல் (அலை) அவர்கள் கட்டித் தழுவுதலும் நபி (ஸல்) அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகுதலும்.
- ஜிப்ரீல் (அலை) அவர்கள், சூறா அலக்கின் முதல் ஐந்து வசனங்களையும் ஓதிக் காண்பித்தல்
- நபி (ஸல்) அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது என்று தெரிவித்தமையும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூன்று தடவைகள் ஓதிக் காண்பித்தமையும்
- அதிர்ச்சியுடன் வீட்டுக்கு திரும்பியமை

(இச்சந்தர்ப்பங்கள் ஐந்தும் குறிப்பிடப்படும் வகையில் முழுச் சம்பவமும் எழுதப்படல் வேண்டும்)

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iii) அல் - குர்ஆன் தொகுப்பில் கலீபா அபூபக்ர் (ரழி) கால முயற்சிகளை விபரிக்குக.

**அபூ பக்ர் (றழி) கால அல்குர்ஆன் தொகுப்பு**

- போலி நபிமார்களை எதிர்த்த போரில் ஹாபிழ்கள் பலர் மரணித்தல்
- அல்குர்ஆன் அழிந்து விடும் என்று உமர் (றழி) அவர்கள் அச்சம் கொள்ளலும் கலீபா அபூபக்ர் (றழி) அவர்களிடம் உமர் (றழி) முறையிடலும்.
- கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் ஸைத் பின் ஸாபித் (றழி) தலைமையில் ஒரு குழுவை நியமித்தல்
- அக்குழு ஹாபிழ்களையும் எழுதப்பட்ட ஏடுகளையும் பரீட்சித்து உறுதிப்படுத்திய பின்னர், அல்குர்ஆனை எழுத்துருவில் தொகுத்தல் (தொகுத்த முறை விரிவாக)
- தொகுக்கப்பட்ட பிரதி (முஸ்ஹப்) ஹப்ஸா (றழி) அவர்களிடம் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டமை

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(iv) கலிபா உஸ்மான் (ரழி) அவர்கள் 'ஜாமிஉல் குர்ஆன்' என அழைக்கப்படுவதற்கான காரணத்தை விபரிக்குக.

**உஸ்மான் (றழி) ஜாமிஉல் குர்ஆன் என அழைக்கப்பட்டமை**

- வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு வழக்கு மொழியில் குர்ஆன் ஓதப்பட்டமை
- போர்க்களத்தில் வேறுபட்ட வழக்குகளில் அல்குர்ஆன் ஓதுவதில் சர்ச்சைப்பட்ட மக்களை ஹுதைபா (றழி) அவதானித்தமை
- அல்குர்ஆன் மூலம் முஸ்லிம்கள் பிளவுபடுவரோ என கலீபாவிடம் அச்சம் தெரிவிக்கப்பட்டமை
- முதலில் பிரதி செய்யப்பட்ட முஸ்ஹபை, கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் ஹப்ஸா (றழி) இடம் பெற்று ஸைத் பின் தாபித் (றழி) தலைமையிலான குழுவிடம் குறைஷிகளின் வழக்கு மொழியில் எழுதவைத்தமை (றஸ்முல் உஸ்மானி) (பல பிரதிகள்)
- அவ்வாறு பிரதி செய்யப்பட்ட முஸ்ஹப்களை மாகாணங்களுக்கு அனுப்பியதோடு, அதனை ஓதிக் காண்பிப்பதற்கான காரிகளையும் அனுப்பியமையும் ஏனைய பிரதிகளை எரிக்கக் கட்டளையிட்டமையும்
- முஸ்லிம்கள் அனைவரும் ஒரே விதத்தில் அல்குர்ஆனை ஓதுவதற்கு உஸ்மான் (றழி) அவர்கள் வழியமைத்து சமூகத்தை அல்குர்ஆனின் பால் ஒன்றுசேர்த்தமையினால் ஜாமிஉல் குர்ஆன் என அழைக்கப்பட்டமை

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கி எழுதி இருப்பின்

(1 x 5 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 5 x 4 = 20 புள்ளிகள்)

**5.** (i) ஹராம், ஹலால் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி, இயல்பாகவும் பெற்றுக்கொள்கின்ற வழிமுறையிலும் ஹராமாக்கப்பட்டுள்ள உணவுப்பொருட்களை வகைப்படுத்திக் காட்டுக.

**ஹலால் ஹராம் வரையறை**

- ஹலால் ஹராம் விளக்கம்
  - ஷரீஆ அனுமதித்த அனைத்தும் ஹலால், தடுத்தவை அனைத்தும் ஹராம்.
  - அடிப்படையில் அனைத்தும் ஹலால், ஹலாலாக்குவதும் ஹராமாக்குவதும் அல்லாஹ்வின் உரிமையாகும்.
  - அல்குர்ஆன், ஸுன்னா என்பன நேரடியாக தடுத்தவை
  - இஜ்திஹாத் மூலம் தடுக்கப்பட்டதாக நிர்ணயிக்கப்பட்டவைகளும் ஹராமாகும்.
  - ஹராமல்லாத அனைத்தும் ஹலாலாகும்.
- அல்குர்ஆன் ஸுன்னா மூலம் சில அம்சங்கள் இயல்பிலேயே ஹராமாக்கப்பட்டுள்ளன. உதாரணம்: செத்தவை, இரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ்வின் பெயர் கூறாமல் அறுக்கப்பட்டவை, நச்சுப் பொருள்கள், அருவருக்கத்தக்கவை....... (5:3)
- வீரப் பற்களுடைய மிருகங்கள், கூரிய நகங்களுடைய பறவைகள் ஹராமானவையாகும். (புஹாரி)
- உடல், ஆன்மா, புத்தி என்பவற்றிக்கு தீங்கு உருவாக்குபவை.

- **பெற்றுக்கொள்ளும் வழிமுறை மூலம் ஹராமானவை.**
- களவெடுத்தவை, கொள்ளையிடப்பட்டவை, வட்டி, சூது, பதுக்கல், கலப்படம், மோசடி, ஹராமான பொருட்களின் விற்பனை மூலம் பெறப்பட்டவை.
- தப்ஹ் செய்யப்படாதவை (மீன், வெட்டுக் கிளி தவிர்ந்த)
- உரிமையில்லாத பொருட்கள் மற்றும் இலஞ்சம் போன்ற தவறான கொடுக்கல் வாங்கல் மூலம் கிடைப்பவை.
- இவை தொடர்பான அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள்

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக விளக்கி எழுதி இருப்பின்

(ii) ஹராமான உணவுப்பொருட்களின் நுகர்வை என் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்குக.

**ஹராமான உணவுப் பொருள்களை ஏன் தவிர்ந்து கொள்ள வேண்டும்**

- அல்லாஹ்வின் கட்டளை (23:53)
- பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாமை (நீண்ட தூர பிரயாணியின் துஆ - ஹதீஸ்)
- உழைப்பு, வருமானம் என்பன தூய்மையானதாக அமைய வேண்டும் என்பதற்காக
- ஆன்மாவைப் பாதிக்கின்றமை
- நற்கருமங்கள் ஏற்கப்படாமை ( ஹறாமில் திரட்டிய சொத்திலிருந்து வழங்கப்படும் தர்மத்திற்கு நன்மையில்லை - ஹதீஸ்)
- சுவன பாக்கியம் கிடைக்காமை (ஹராத்தை உண்டவன் சுவனம் நுழைய மாட்டான் - ஹதீஸ்)
- தீங்குபயப்பன அனைத்தும் ஹராமாகும்.
  - நச்சுத்தன்மையுடையவை (பாம்பு)
  - நோய் ஏற்படுத்துபவை (பன்றி)
  - ஒழுகக் கேட்டை ஏற்படுத்துபவை (போதை வஸ்த்து)

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக விளக்கி எழுதி இருப்பின்

(2 x 5 = 10 புள்ளிகள்)

6. (i) இஸ்லாமிய பொருளாதார முறையில் வியாபாரத்துக்கும் வட்டிக்குமிடையிலான வேறுபாட்டை விளக்குக.

**வியாபாரத்திற்கும் வட்டிக்குமிடையிலான வேறுபாடு**

| வியாபாரம் | வட்டி |
|---|---|
| • அனுமதிக்கப்பட்டது (ஹலால்) | • தடுக்கப்பட்டது (ஹறாம்) |
| • அனுபவிப்பது ஹலால் | • அனுபவிப்பது ஹறாம் |
| • இலாபமும் நட்டமும் உடையது | • இலாபம் மட்டும் கொண்டது |
| • பணத்தை வழங்கி பொருளை வாங்கி பணத்திற்கு விற்பனை செய்யும் முறையிலானது. (பணம் – பொருள் – பணம்) | • பணத்தைக் கொடுத்து பணத்தைப் பெறல் பொருளைக் கொடுத்து பொருள் பெறும் முறையிலானது (பணம் – பணம்) |
| • நுகர்வோன் நன்மையடைதல் | • நுகர்வோன் பாதிக்கப்படல் |
| • சமூக சேவை | • சமூக துரோகம் |
| • நற்செயல் (நன்மையுண்டு) | • பாவச்செயல் (தீமையுண்டு) |

அல்குர்ஆன் ஸுன்னா ஆதாரங்கள்

– அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கியுள்ளான். வட்டியை ஹறாமாக்கியுள்ளான்.

– ஹலால் தெளிவானது, ஹறாம் தெளிவானது (ஹதீஸ்)

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக விளக்கி எழுதி இருப்பின்

(ii) சேவைத் தொழிலில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளாக இஸ்லாம் குறிப்பிட்டுள்ள விடயங்களை விபரிக்குக.

**சேவைத் தொழிலில் பின்பற்ற வேண்டிய வழிமுறை**

- சேவைத் தொழில் பற்றிய அறிமுகம்
- சமூகத் தொண்டாகக் கருதுதல்
- பயனாளிகளுக்கு இரக்கம் காட்டுதல்
- திறமைகளை வளர்த்துக் கொள்ளல்
- நேர்த்தியாகவும் கவர்ச்சியாகவும் செய்தல்
- அர்ப்பணிப்புடன் செயலாற்றல்
- ஓர் அமானிதம் – பாழ்படுத்தக்கூடாது
- பணியை அலட்சியம் செய்யாதிருத்தல்
- பாரபட்சமின்றி செயற்படல்
- நேரத்திற்கு செயலாற்றல்
- சேவைத் தொழில் பொறுப்புக்களாகும். அவை பற்றி விசாரிக்கப்படும்
- தொழில் ஒரு ஒப்பந்தம், வாக்குறுதி (அமானிதம் இல்லாதவனிடம் ஈமானில்லை)
- ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படுவார்கள்

இவை போன்ற பத்து அம்சங்கள் தொடர்பாக எழுதி இருப்பின்

(1 x 10 = 10 புள்ளிகள்)

**7.** (i) இஜ்திஹாத் என்றால் என்ன? இஜ்திஹாத் காண வேண்டிய தேவை எப்போது ஏற்படுகின்றது என்பதை வரலாற்று ரீதியான ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக.

**இஜ்திஹாத் என்பது**

- சொல் விளக்கம்: ஜஹ்த் ( கஷ்டம் ) ஜாஹத் ( முயற்சி ) என்ற மூலத்திலிருந்து பிறந்த சொல்லாகும். முழு முயற்சியையும் செலவிடுவதைக் குறிக்கும்
- பொருள் விளக்கம் : அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ நேரடியாக தீர்வு குறிப்பிடாத ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு சட்ட அறிஞன் ( முஜ்தஹித் ) மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சி இஜ்திஹாத் எனப்படும்.
- ஆதாரங்கள் – அல்குர்ஆன் ஸுன்னா மேற்கோள்கள் (4:59)
  - தீர்ப்பு சரியாக அமைந்தால் இரண்டு கூலி, சரியாக அமையாவிடின் ஒரு கூலி (ஹதீஸ்)
  - முஆத் இப்னு ஜபல் (றழி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியமை (ஹதீஸ்)

**இஜ்திஹாதுக்கான தேவை**

- நபி ( ஸல் ) அவர்களின் காலத்தில் அல்குர்ஆனும் ஸுன்னாவும் சட்ட வாக்கத்துக்கான மூலாதாரங்களாக இருந்தன. வஹி கிடைக்காத போது நபி (ஸல்) அவர்கள் இஜ்திஹாத் கண்டார்கள்
- இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்தமானது
- நபி (ஸல்) அவர்களுக்குப் பின் தகுதிவாய்ந்த ஸஹாபாக்கள் இஜ்திஹாத் கண்டார்கள். அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் ஆதாரமாகக் கொண்டார்கள்.
- இஸ்லாம் விரிவடைந்தபோது பல்வேறுபட்ட கலாசார சூழலில் வாழ்ந்தோர் இஸ்லாத்தை ஏற்றனர். அவர்களுக்குப் பல பிரச்சினைகள் தோன்றின. அவற்றுக்கான தீர்வு அல்குர்ஆன், ஸுன்னாவில் நேரடியாகக் கிடைக்கவில்லை.
- எனவே, ஸஹாபாக்களும் தாபிஈன்களும் இஜ்திஹாத் செய்து அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டனர். தாபிஈன்கள், தபஉத் தாபியீன்கள் காலத்தில் பிரச்சினைகள் அதிகரிக்க இஜ்திஹாத் பணியும் அதிகரித்தது.
- இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றோர் இம்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.
- முஜ்தஹித் முத்லக் பலர் தோன்றி இப்பணியை சிறப்பாக நிறைவேற்றினர்.
  இதனால் பிக்ஹு ஒரு தனிக்கலையாக தோன்றி அதற்கான விளக்கங்களும் நூல்களும் எழுதப்பட்டன. அவர்களைத் தொடர்ந்து அவர்களின் மாணவர்கள் செயற்பட்டனர். இதனால் மத்ஹப் என்ற அமைப்புத் தோன்றியது. அது தொடர்பாக சட்ட நூல்கள், விளக்க நூல்கள் எழுதப்பட்டன.

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக விளக்கி எழுதி இருப்பின்

(ii) இஜ்மா, கியாஸ் என்பன கையாளப்படும் முறையினை உதாரணங்காட்டி விளக்குக.

- இஜ்மா கியாஸ் ஆகிய இரண்டும் இஜ்திஹாதின் அடிப்படையில் அமைந்த துணைமூலாதாரங்களாகும்.
- இஜ்மா என்பது கூட்டு முயற்சியாக இடம்பெறுகிறது. அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ நேரடியாக தீர்வு கிடைக்காத போது தகுதி வாய்ந்த முஜ்தஹித்களால் இஜ்திஹாத் காணப்பட்டு கிடைக்கும் ஏகமனதான தீர்வு இஜ்மாவாகும்.
- இஜ்மா கையாளப்படும் ஆதாரத்தின் படி இஜ்மா நக்லி, இஜ்மா இஜ்திஹாதி என இரு வகைப்படும்.
- இஜ்மா முஜ்தஹித்களின் பங்களிப்புக்கேற்ப நான்கு வகைப்படும்.

1. இஜ்மா ஸரீஹ்
2. இஜ்மா சுகூதி
3. இஜ்மா முரக்கப்
4. இஜ்மா அக்ஸரிய்யா

**இஜ்மா ஸரீஹ்**

- இது அனைத்து முஜ்தஹித்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கின்ற ஏகோபித்த முடிவாகும். (உதாரணம் அபூபக்ர் (றழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்டமை
- இஜ்மா அக்ஸரிய்யா – முஜ்தஹித்கள் பெரும்பாலானோர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகள் (எனது உம்மத்தினர் அனைவரும் வழிகேட்டில் ஒன்று சேர மாட்டார்கள் - ஹதீஸ்)
- இஜ்மா ஸுகூதி – ஒரு முஜ்தஹித் முன்வைத்த தீர்வை ஏனையோர் அது பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்காது மௌனம் காத்தல்
- இஜ்மா முறக்கப் - ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பில் முஜ்தஹித்களிடையே சட்ட வலுத் தன்மை (வாஜிப், சுன்னத்) தொடர்பில் வித்தியாசமான அபிப்பிராயங்கள் காணப்பட்டாலும் மூன்றாவது ஒரு சட்ட கருத்து (ஹறாம்) காணப்படாமை. (உதாரணம் - தாடி)

- கியாஸ் என்பது ஒப்புநோக்கல் என்பதாகும். அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ இஜ்மாவிலோ குறித்த ஒரு பிரச்சினைக்கான தீர்வு காணப்படாதபோது அப்பிரச்சினையை ஒத்த ஏற்கனவே தீர்வு கூறப்பட்ட பிரச்சனை ஒன்றோடு, ஒப்புநோக்கி தீர்வுகாண்பதாகும்.

- கியாஸின் நான்கு அர்கான்களையும் அனுசரித்து தீர்வு காண்பதை உதாரணம் மூலம் விளக்குதல்

| | | | | |
|---|---|---|---|---|
| அஸ்ல் | - | ஈத்தங் கள்ளு | : | தீர்வு கூறப்பட்டது |
| பரஉ | - | தென்னங் கள்ளு | : | தீர்வு வேண்டிநிற்பது |
| இல்லத் | - | போதை தரக்கூடியது | : | பொதுத் தன்மை |
| ஹுக்கும் | - | ஹறாம் | : | தீர்ப்பு |

இஜ்மாவைக் கையாளும் முறை தொடர்பாக ஐந்து விடயங்களை விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளிகளும்
கியாஸைக் கையாளும் முறை தொடர்பாக ஐந்து விடயங்களை விளக்கி எழுதி இருப்பின் 5 புள்ளிகளும்

(5 + 5 = 10 புள்ளிகள்)

(மொத்தம் 10 x 2 = 20 புள்ளிகள்)

**8.** (i) ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை எடுத்துக்காட்டுக.

**ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகள்**

- ஆன்மீகம் பற்றிய அறிமுகம்
  ஆன்மாவைத் தூய்மைப்படுத்தல் - தஸ்கிய்யதுந் நப்ஸ் (தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றிடையந்தவனாவான்....அல்குர்ஆன்)
  உடலில் ஒரு தசைத் துண்டு உண்டு...அது சீர் பெற்றால்....(ஹதீஸ்)

- ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதற்கான வழிமுறைகள்
  - தௌபா
  - வரஉ
  - தவக்குல்
  - றிழா
  - தக்வா
  - ஸுஹ்த்
  - மஹப்பத்

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக ஆதாரங்களுடன் விளக்கி எழுதி இருப்பின்

(2 x 5 = 10 புள்ளிகள்)

(ii) தௌபா என்றால் என்ன என்பதை விளக்கி, அது அங்கீகரிப்படுவதற்கான வழிமுறைகளை விளக்குக.

**தௌபா பற்றிய அறிமுகம்**

- சொல் விளக்கம்: மீளுதல், திரும்புதல், மன்னிப்புக் கோருதல்
- பொருள் விளக்கம்: உடலை நீரால் கழுவுது போல உள்ளத்தை தௌபா மூலம் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள் :
  - பாவமன்னிப்புக் கேட்பதன் மூலம் வெற்றி பெறுவதாக குர்ஆன் குறிப்பிடுகிறது.
  - நபி (ஸல்) அவர்கள் தினமும் 100 விடுத்தம் இஸ்திக்பார் செய்வார்கள்
- அல்லாஹ்வுடன் தொடர்பான பாவங்களுக்காக, பாவம் நிகழ்ந்தவுடன் பாவமன்னிபுக் கோர வேண்டும்.
- மக்களுடன் தொடர்பான பாவமாயின் நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும். நட்ட மேற்பட்டிருப்பின் அதனை கொடுக்க வேண்டும். அதன் பிறகு அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோர வேண்டும்.

- அங்கீகரிப்பதற்கான வழிமுறை
  - குறிப்பிட்ட தவறையோ குற்றத்தையோ விட்டுவிடல்
  - அவற்றை நினைத்து வருந்துதல்
  - இனிமேல் அவற்றைச் செய்வதில்லை என உறுதிகொள்ளல்.
  - பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்புக் கோரல்.
  - பொருள் தொடர்பானதாயின் அதனைத் திருப்பிக் கொடுத்தல்

இவை போன்ற ஐந்து அம்சங்கள் தொடர்பாக விளக்கி எழுதி இருப்பின்

(2 x 5 = 10 புள்ளிகள்)

(மொத்தம் 10 x 2 = 20 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| வினாப் பத்திரம் 1 | – | 2x 50 = 100 புள்ளிகள் |
| வினாப் பத்திரம் 2 | – | 20 x 5 = 100 புள்ளிகள் |
| மொத்தம் | | 200 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | | 200/2=100 புள்ளிகள் |